

# LORDS TODAY

LORDS TODAY - International Social Media & Magazine
LORDS TODAY RNI Ref. No. 1287921 Title Code : TNBL04354 | Issue : February 2022
WhatsApp : 91-98405 59673 Editor | Publisher & O wner : Lords. M. PAULRAJ
Free for - LORDS | LIONS | ROTARY & All International Social Service CLUBS


2021- 16796675765










Lords ம பால்ராஜ்
Founder | International President

**LORDS CLUBS INTERNATIONAL**
Govt. Reg. No.:1359/2013
**INTERNATIONAL SOCIAL SERVICES**


www.lordsclubs.com




# தலையங்கம்...

## உலக மக்களின் மூன்று மதம் வேத நூல்கள்


### தொடர் 13




**BIBLE Tamil**
**6 Page's**
தொடரும்.....




**KURAN Tamil**
**6 Page's**
தொடரும்.....




**BHAGAVAD GITA-Tamil**
**6 Page's**
தொடரும்.....




**உலக ஊடக வரலாற்றில் முதல்முறையாக** உலக மக்கள் நலன்கருதி உலகிலேயே முதல்முறையாக உலகத்தரம் வாய்ந்த 3 மதம் வேதநூல் மெகாத்தொடர் ஒவ்வொரு மாதமும் **பகவத் கீதை** ஆறு பக்கங்களும் **பைபிள்** ஆறு பக்கங்களும் **குரான்** ஆறு பக்கங்களும் ஆக மொத்தம் 18 பக்கங்கள் மாதம் தோரும் தவறாமல் தமிழில் பிரசுரிக்கப்பட்டு வெளிவரும் என்று அனைத்து வாசகர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியுடனும் அன்புடனும் தெரிவித்துக் கொள்கின்றேன். நான் முற்றிலுமாகப் படித்து முடித்த இந்த 3மத வேதநூல்களையும் பொதுமக்கள் அனைவரும் பக்த்தியுடன் படித்து ஊழல் பாவங்கள் உட்பட அனைத்து பாவங்களும் செய்யாமல் நேர்மையுடனும் ஒற்றுமையுடனும் வாழ வேண்டும் என பொதுமக்கள் அனைவருக்கும் அன்புடன் வேண்டுகோள் வைக்கின்றேன். இனி நல்லதை படித்து நல்லதை படைத்து, இவ்வுலக மக்களுக்கு நல்லதையே செய்து பொதுமக்களின் அனவைருடைய பொருளாதாரத்தையும் உயர்திடுவோம். அன்புடன் உங்கள்,


லார்ட்ஸ் ம பால்ராஜ்

**LORDS TODAY**
RNI Ref. No. : 1287921 Title Code : TNBL04354
International social media and magazine
Editor | Publisher | and Owner

**LORDS CLUBS INTERNATIONAL**
Govt. Reg. No. : 1359/2013
International social service clubs
International President | and Founder
Web : www.lordsclubs.com

# BIBLE

## மெகா தொடர்
## PART-13




## தொடக்கநூல் அதிகாரம் – 29 – திருவிவிலியம்

### லாபான் வீட்டை யாக்கோபு வந்தடைதல்

1 யாக்கோபு கீழ்த்திசை மக்களின் நாட்டை நோக்கிக் காலெடுத்து வைத்துப் பயணமானார்.

2 இதோ! வயல்வெளியில் ஒரு கிணற்றையும், அதன் அருகே கிடை போட்டிருந்த ஆட்டுமந்தைகள் மூன்றையும் கண்டார். அந்தக் கிணற்றிலிருந்துதான் மந்தைகளுக்குத் தண்ணீர் காட்டப்படும். அதன் வாய் ஒரு பெரிய கல்லால் மூடப்பட்டிருந்தது.

3 மந்தைகள் எல்லாம் ஒன்று சேர்ந்தபின் இடையர்கள் கல்லைப் புரட்டி, அவை குடித்து முடிந்ததும், மறுபடியும் கல்லைக் கிணற்று வாயின்மேல் தூக்கிவைப்பது வழக்கம்.

4 யாக்கோபு இடையர்களை நோக்கி, சகோதரரே, நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? என, அவர்கள்; நாங்கள் காரானிலிருந்து வருகிறோம் என்றார்கள்.

5 மீண்டும் அவர்; நாகோரின் பேரன் லாபானை உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்க, அவர்கள், அவரை எங்களுக்குத் தெரியும் என்றார்கள்.

6 அவர் நலம்தானா? என்று யாக்கோபு கேட்க, அவர்கள் ஆம், அவர் நலமே. இதோ! அவர் மகள் ராகேல் தன் ஆடுகளை ஓட்டிக் கொண்டு வருகிறாள் என்றார்கள்.

7 அப்பொழுது யாக்கோபு, பொழுது சாய இன்னும் வெகுநேரம் இருக்கிறது! மந்தைகளை ஒன்றுசேர்ப்பதற்கு நேரம் ஆகவில்லை. ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டி, மேய்ச்சலுக்கு இட்டுச் செல்லுங்கள் என்றார்.

8 அதற்கு அவர்கள், நாங்கள் அப்படிச் செய்யக்கூடாது. ஏனெனில், எல்லா மந்தைகளையும் ஒன்றுசேர்த்த பின்னரே கிணற்று வாயினின்று கல் புரட்டப்படும். அப்பொழுதுதான் ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டுவோம் என்று சொன்னார்கள்.

9 இப்படி அவர்கள் பேசிக் கொண்டிருக்கையில் ஆடு மேய்ப்பவளான ராகேல் தன் தந்தையின் ஆடுகளை ஓட்டிக்கொண்டு வந்தாள்.

10 ராகேல் தன் தாய்மாமன் லாபானின் மகள் என்றும் ஆடுகள் அவனுடையவை என்றும் யாக்கோபு கண்டார்; எனவே, கிணற்றை மூடியிருந்த கல்லைப் புரட்டித் தன் தாய்மாமன் லாபானின் மந்தைக்குத் தண்ணீர் காட்டினார்;

11 பின் ராகேலை முத்தமிட்டுக் கதறி, ஆனந்தக் கண்ணீர் விட்டார்.

12 பின்பு, தாம் அவள் தந்தைக்கு உறவினர் என்றும் ரெபேக்காவின் மகன் என்றும் அவளுக்குத் தெரிவிக்க, உடனே அவள் ஓடிப்போய்த் தன் தந்தையிடம் சொன்னாள்.

13 தன் சகோதரியின் மகன் யாக்கோபு வந்த செய்தி கேட்டவுடன் லாபான் அவருக்கு எதிர்கொண்டோடி, அவரை அரவணைத்து முத்தமிட்டுத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றான். அங்கு யாக்கோபு தமக்கு நேர்ந்தவற்றையெல்லாம் எடுத்துரைத்தார்.

14 லாபான் அவரிடம், நீ என் எலும்பும் சதையுமல்லவா? என்றான். அவனுடன் அவர் ஒரு மாத காலம் தங்கியிருந்தார்.

# BIBLE




**யாக்கோபு லேயாவையும் ராகேலையும் மணந்து கொள்ளல்**

15 அதன்பின், லாபான் யாக்கோபை நோக்கி, நீ என் உறவினன் என்பதற்காக ஒன்றும் வாங்காமல் எனக்கு வேலை செய்யலாமா? சம்பளம் எவ்வளவு கேட்கிறாய்? சொல் என்றான்.

16 லாபானுக்கு இரண்டு புதல்வியர் இருந்தனர். மூத்தவள் பெயர் லேயா; இளையவள் பெயர் ராகேல்.

17 ஆனால், லேயா மங்கிய பார்வை உடையவள். ராகேலோ வடிவழகும் எழில் தோற்றமும் உள்ளவள்.

18 யாக்கோபு ராகேலை விரும்பினார். எனவே அவர், உம் இளைய மகள் ராகேலுக்காக ஏழு ஆண்டுகள் உம்மிடம் வேலை செய்கிறேன் என்றார்.

19 அதற்கு லாபான், அவளை அந்நியன் ஒருவனுக்குக் கொடுப்பதைவிட, உனக்குக் கொடுப்பதே மேல். என்னோடு தங்கியிரு என்றான்.

20 அப்படியே யாக்கோபு ஏழாண்டுகள் ராகேலை முன்னிட்டு வேலை செய்தார். ஆனால், அவர் அவள்மீது வைத்திருந்த அன்பின் மிகுதியால் அது அவருக்குச் சில நாட்களாகவே தோன்றியது.

21 பின்னர், யாக்கோபு லாபானை நோக்கி; நான் என் மனைவியோடு சேரும்பொருட்டு, அவளை எனக்குத் தாரும். என் ஒப்பந்த நாள்கள் நிறைவெய்திவிட்டன என்றார்.

22 ஆகவே, லாபான் அவ்வூர் மக்கள் அனைவரையும் அழைத்துத் திருமண விருந்தளித்தான்.

23 ஆனால், மாலையானதும் அவன் தன் மகள் லேயாவை அழைத்துக் கொண்டுபோய் யாக்கோபிடம் விட, அவர் அவளுடன் உறவு கொண்டார்.

24 லாபான் தன் மகள் லேயாவுக்குப் பணிபுரியத் தன் பணிப்பெண் சில்பாவைக் கொடுத்தான்.

25 அதிகாலையில் அந்தப் பெண் லேயா என்று கண்டு, யாக்கோபு லாபானை நோக்கி: நீர் எனக்கு ஏன் இப்படிச் செய்தீர்? ராகேலுக்காக அல்லவா நான் உம்மிடம் வேலைசெய்தேன்? என்னை ஏமாற்றியது ஏன்? என்றார்.

26 அதற்கு லாபான்: மூத்தவள் இருக்க இளையவளைக் கொடுப்பது எங்கள் ஊர் வழக்கமில்லை.


27 ஆகையால், நீ இவளோடு ஏழு நாள்களைக் கழி. இன்னும் ஏழாண்டுகள் என்னிடம் வேலை செய்தால் அவளையும் உனக்குக் கொடுப்பேன் என்றான்.

28 அவ்வாறே, யாக்கோபு லேயாவுடன் ஏழு நாள்களைக் கழித்தார். அதன் பின், லாபான் தன் மகள் ராகேலை அவருக்கு மனைவியாகக் கொடுத்தான்.

29 லாபான் தன் மகள் ராகேலுக்குப் பணிபுரியத் தன் பணிப்பெண் பில்காவைக் கொடுத்தான்.

30 யாக்கோபு ராகேலுடன் கூடிவாழ்ந்தார். அவளை லேயாவைவிட அதிகம் நேசித்தார். லாபானிடம் மேலும் ஏழு ஆண்டுகள் வேலை செய்தார்.

# BIBLE




## யாக்கோபின் புதல்வர்கள்

31 இப்படியிருக்க லேயா வெறுப்புக்குள்ளானதை ஆண்டவர் கண்டு அவருக்குத்
தாய்மைப்பேறு அருளினார். ராகேலோ மலடியாகவே இருந்தார்.

32 லேயா கருத்தாங்கி ஒரு மகனைப் பெற்றெடுத்தார். ஆண்டவர் என் தாழ்நிலையைக்
கண்ணோக்கினார். இப்பொழுது என் கணவர் என்மீது அன்புகூர்வார் என்பது உறுதி
என்று கூறி, அவனுக்கு ரூபன் மீ என்று பெயரிட்டார்.

33 மீண்டும் அவர் கருத்தாங்கி ஒரு மகனைப் பெற்றெடுத்தார். நான்
வெறுப்புக்குள்ளானேன் என்பதை ஆண்டவர் கேட்டு, இவனையும் எனக்குத்
தந்தருளினார் என்று சொல்லி, அவனுக்குச் சிமியோன் மீ என்று பெயரிட்டார்.

34 அவர் மீண்டும் கருவுற்று இன்னொரு மகனைப் பெற்றெடுத்தார். இப்பொழுது
என்கணவர் என்னோடு இணைந்திருப்பார் என்பது உறுதி. ஏனெனில் நான் அவருக்கு
மூன்று புதல்வரைப் பெற்றெடுத்துள்ளேன் என்று கூறி அவனுக்கு லேவி மீ என்று
பெயரிட்டார்.

35 அவர் மீண்டும் கருத்தாங்கி ஒரு மகனைப் பெற்றெடுத்தார். இப்போது ஆண்டவரை
நான் மாட்சி படுத்துவேன் , என்று சொல்லி அவனுக்கு யூதா மீ என்று பெயரிட்டார்.
அதன்பின் அவருக்குப் பிள்ளைப்பேறு நின்றுபோயிற்று.

## தொடக்கநூல் அதிகாரம் – 30 – திருவிவிலியம்

1 தாம் யாக்கோபுக்குப் பிள்ளை பெறவில்லையே என்று ராகேல் தம் சகோதரியின் மேல்
பொறாமை கொண்டார். அவர் தம் கணவனை நோக்கி, நீர் எனக்குப் பிள்ளைகளைத்
தாரும். இல்லையேல் செத்துப் போவேன் என்றார்.

2 யாக்கோபு அவர் மீது சினம் கொண்டு, நான் என்ன கடவுளா? அவரல்லவா உனக்குத்
தாய்மைப் பேறு தராதிருக்கிறார் என்றார்.

3 அப்பொழுது ராகேல் இதோ என் பணிப்பெண் பில்கா. நீர் அவளோடு கூடி வாழ்வீர்.
அவள் எனக்காக பிள்ளை பெற்று என் மடியில் வைக்க, நானும் அவள் மூலம் பிள்ளைப்
பேறு பெறுவேன் என்றார்.

4 பின்பு, அவர் அவருக்குத் தம் பணிப்பெண் பில்காவை மனைவியாகக் கொடுக்க,
அவரும் அவளுடன் கூடி வாழ்ந்தார்.

5 பில்கா கருவுற்று யாக்கோபுக்கு ஒரு மகனைப் பெற்றெடுத்தாள்.


6 ராகேல், ஆண்டவர் எனக்கு நீதி வழங்கி, என் மன்றாட்டைக் கேட்டருளி, எனக்கு ஒரு
மகனைத் தந்தார் என்று சொல்லி அவனுக்குத் தாண் மீ என்னும் பெயரிட்டார்.

7 பில்கா மீண்டும் கருவுற்று மற்றொரு மகனைப் பெற்றாள்.

8 ராகேல் நான் என் சகோதரியோடு கடுமையான போராட்டங்களில் ஈடுபட்டு
வெற்றிகொண்டேன் என்று கூறி அவனுக்கு நப்தலி மீ என்று பெயரிட்டார்.

9 லேயா தமக்குப் பிள்ளைப்பேறு நின்றுவிட்டதென்று கண்டு, தம் பணிப்பெண் சில்பாவை
யாக்கோபுக்கு மனைவியாகக் கொடுத்தார்.

# BIBLE




10 லேயாவின் பணிப்பெண் சில்பா யாக்கோபுக்கு ஒரு மகனைப் பெற்றெடுத்தாள்.

11 லேயா, நான் நற்பேறு பெற்றுள்ளேன் என்று சொல்லி அவனுக்குக் காத்து மீ என்று பெயரிட்டார்.

12 லேயாவின் பணிப்பெண் சில்பா மீண்டும் யாக்கோபுக்கு ஒரு மகனைப் பெற்றெடுத்தாள்.

13 லேயா எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி! பெண்டிர் என்னை மகிழ்ச்சி பெற்றவள் என்பர் என்று சொல்லி, அவனுக்கு ஆசேர் மீ என்று பெயரிட்டார்.

14 கோதுமை அறுவடைக் காலத்தில் ரூபன் வயல்வெளியில் தூதாயிம் கனிகளைக் கண்டு, அவற்றைத் தன்தாய் லேயாவிடம் கொண்டுவந்து கொடுத்தான். ராகேல் அவரிடம், உன் மகன் கொண்டுவந்த தூதாயிம் கனிகளில் எனக்கும் கொஞ்சம் கொடு என்று கேட்டார்.

15 அதற்கு அவர், என் கணவனை நீ பறித்துக் கொண்டது போதாதா? என் மகன் கொண்டு வந்த கனிகளையும் பறித்துக் கொள்வாயோ? என்றார். அப்பொழுது ராகேல், சரி, உன் மகன் கொண்டு வந்த தூதாயிம் கனிகளுக்குப் பதிலாக அவர் இன்றிரவு உன்னோடு கூடியிருக்கட்டும் என்றார்.

16 மாலை வேளையில் யாக்கோபு வயல் வெளியினின்று திரும்பி வரும்போதே, லேயா அவருக்கு எதிர்கொண்டுபோய், நீர் என்னோடு கூடியிருக்க வேண்டும். ஏனெனில், என் மகன் கொண்டுவந்த தூதாயிம் கனிகளை ஈடாகக் கொடுத்து உம்மை நான் வாங்கிக்கொண்டேன் என்றார். அவர் அன்றிரவு அவரோடு கூடியிருந்தார்.

17 கடவுள் லேயாவுக்குச் செவிசாய்த்தார். அவர் கருத்தாங்கி யாக்கோபுக்கு ஐந்தாம் மகனைப் பெற்றெடுத்தார்.

18 நான் என் பணிப்பெண்ணை என் கணவருக்குக் கொடுத்ததற்காகக் கடவுள் எனக்கு ஈடுசெய்துள்ளார் என்று சொல்லி அவனுக்கு இசக்கார் மீ என்று பெயரிட்டார்.

19 மீண்டும் லேயா கருத்தாங்கி ஆறாம் மகனைப் பெற்றெடுத்தார்.

20 லேயா கடவுள் எனக்கு ஒரு சிறந்த கொடை கொடுத்துள்ளார். இனிமேல் என் கணவர் என்னைப் பெருமையாக நடத்துவார். ஏனெனில், நான் அவருக்கு ஆறு புதல்வரைப் பெற்றிருக்கிறேன் என்று கூறி அவனுக்குச் செபுலோன் மீ என்று பெயரிட்டார்.

21 பிறகு, அவர் ஒரு பெண்மகவைப் பெற்று, அவளுக்குத் தீனா என்று பெயரிட்டார்.

22 பின்பு, கடவுள் ராகேலை நினைவுகூர்ந்தார். அவர் அவருக்குச் செவிசாய்த்துத் தாய்மைப்பேறு அருளினார்.

23 அவரும் கருத்தாங்கி ஒரு மகனைப் பெற்றெடுத்து கடவுள் என் இழிவைப் போக்கினார் என்றார்.


24 மேலும், அவர் ஆண்டவர் இன்னொரு மகனையும் எனக்குச் சேர்த்துத் தருவாராக என்று கூறி, அவனுக்கு யோசேப்பு மீ என்று பெயரிட்டார்.

## யாக்கோபின் உடைமைகள்

25 ராகேல் யோசேப்பைப் பெற்றெடுத்த பின் யாக்கோபு லாபானை நோக்கி, என் சொந்த இடத்திற்கும் நாட்டிற்கும் திரும்பிப்போக என்னை அனுப்பி வைப்பீராக!

26 என் மனைவியரையும் என் பிள்ளைகளையும் எனக்குத் தந்து என்னைப் போகவிடும். அவர்களுக்காக நான் உம்மிடம் வேலை செய்துள்ளேன். நான் உமக்குச் செய்துள்ள வேலை இன்னதென்று உமக்குத் தெரியும் என்றார்.

# BIBLE




27 லாபான் அவரை நோக்கி, உமக்குத் தடையேதும் இல்லையெனில் தயவுகூர்ந்து இங்கேயே தங்கிவிடும். உம் பொருட்டு ஆண்டவர் எனக்கு ஆசி வழங்கியிருக்கிறார் என்பதைக் குறிபார்த்து அறிந்து கொண்டேன்.

28 உமக்குரிய கூலியைக் குறிப்பிடும். நான் அதைக் கொடுத்து விடுகிறேன் என்றான்.

29 அதற்கு அவர், நான் உம்மிடம் எவ்வளவு வேலை செய்துள்ளேன் என்பதையும் உம் மந்தை என்னிடம் எப்படி இருந்தது என்பதையும் நீர் அறிவீர்.

30 நான் உம்மிடம் வருமுன் உமக்கிருந்தது கொஞ்சமே; இப்பொழுதோ மிகுதியாகப் பெருகிவிட்டது. நான் கால்வைக்கும் இடமெல்லாம் ஆண்டவர் உமக்கு ஆசி வழங்கியிருக்கிறார். என் குடும்பத்திற்காக நான் உழைப்பது எப்போது? என்றார்.

31 அதற்கு லாபான், நான் உமக்கு என்ன தரவேண்டும்? என, யாக்கோபு எனக்கு நீர் ஒன்றும் தர வேண்டியதில்லை. இந்த ஒன்றை மட்டும் நீர் எனக்குச் செய்தால், நான் தொடர்ந்து உம் மந்தையை மேய்த்துப் பாதுகாப்பேன்.

32 உம் மந்தைகளூடே இன்று நான் செல்வேன். அவற்றினின்று கலப்பு நிறமோ புள்ளியோ உடைய செம்மறியாடுகளையும் கறுப்பு நிறம் கொண்ட ஆட்டுக் குட்டிகள் அனைத்தையும் புள்ளியோ கலப்பு நிறமோ உடைய வெள்ளாடுகளையும் தனியாகப் பிரித்துக் கொள்வேன். இவை எனக்குரிய கூலியாக இருக்கட்டும்.

33 எனக்குரிய பங்கைச் சரிபார்க்க நீர் வரும்போது என் நேர்மை எனக்குச் சான்று பகர்வதாக! கலப்பு நிறமோ புள்ளியோ இல்லாத வெள்ளாட்டையோ, கறுப்பு நிறமற்ற ஆட்டுக் குட்டியையோ நீர் கண்டால், அது திருடப்பட்டதாக எண்ணப்படும் என்றார்.

34 அதற்கு லாபான், நீர் சொன்னபடியே ஆகட்டும் என்றான்.

35 ஆனால் அன்றே அவன் வரியோ புள்ளியோ உடைய வெள்ளாட்டுக் கிடாய்களையும், கலப்பு நிறமோ புள்ளியோ உடைய வெள்ளாடுகள் அனைத்தையும் வெள்ளைப் புள்ளி கொண்ட எல்லாவற்றையும், கறுப்பாய் இருந்த எல்லா ஆட்டுக்குட்டிகளையும் பிரித்துத் தம் புதல்வரிடம் ஒப்படைத்து,

36 தனக்கும் மீதமுள்ள தன் மந்தைகளை மேய்த்துவந்த யாக்கோபுக்கும் இடையில் மூன்று நாள் வழித்தூரம் இருக்கும்படியும் செய்துவிட்டான்.

37 அது கண்ட யாக்கோபு புன்னை, வாதுமை, அர்மோன் என்னும் மரங்களின் பசிய கொப்புகளை வெட்டி, அவற்றில் இடையிடையே உள்தண்டின் வெள்ளைப்பகுதி தெரியுமாறு உரித்தார்.

38 மேலும், தம் மந்தைகள் தண்ணீர் குடிக்க வரும்போது, ஆடுகள் அந்த வரியுள்ள கொப்புகளை எதிரில் கண்டு பொலிந்து சினைப்படும் பொருட்டு, நீர்த்தொட்டிகளில் அவற்றை அவர் போட்டு வைத்தார்.

39 பொலியும் நேரத்தில் அக்கொப்புகளைக் கண்டு பொலிந்த ஆடுகள் வரியோ, கலப்பு நிறமோ, புள்ளியோ உடைய குட்டிகளை ஈன்றன.

40 மேலும், யாக்கோபு ஆட்டுக்குட்டிகளைப் பிரித்தெடுத்தார். லாபானின் மந்தைகளில் வரியோ கறுப்பு நிறமோ உடைய ஆடுகளை நோக்கி மந்தையை நிற்கச் செய்தார். தமக்குரிய மந்தைகளை லாபானின் மந்தையோடு சேராமல் பிரித்து வைத்தார்.

# BIBLE





41 மந்தையின் வலிமையுள்ள ஆடுகள் பொலியும்போது, மந்தைக்கு எதிரேயிருந்த நீர்த்தொட்டியில் அக்கொப்புகளைப் போட்டார்; அக்கொப்புகளிடையே அவை பொலிந்தன.

42 வலிமையற்ற ஆடுகளுக்குமுன் கொப்புகளைப் போடவில்லை. எனவே, லாபானின் ஆடுகள் வலுவற்றவையாகவும் யாக்கோபின் ஆடுகள் வலுவுள்ளவையாகவும் ஆயின.

43 இவ்வாறு, யாக்கோபு பெரும் செல்வரானார். மந்தைகள், வேலைக்காரர், வேலைக்காரிகள், ஒட்டகங்கள், கழுதைகள் ஆகியவற்றை அவர் பெருமளவில் கொண்டிருந்தார்.

தொடரும்.....






2:215. அவர்கள் உம்மிடம் கேட்கிறார்கள்; “எதை, (யாருக்குச்) செலவு செய்யவேண்டும்” என்று; நீர் கூறும்: “(நன்மையை நாடி) நல்ல பொருள் எதனை நீங்கள் செலவு செய்தாலும், அதை தாய், தந்தையருக்கும், நெருங்கிய உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், மிஸ்கீன்(ஏழை)களுக்கும், வழிப்போக்கர்களுக்கும் (கொடுங்கள்); மேலும் நீங்கள் நன்மையான எதனைச் செய்தாலும் நிச்சயமாக அல்லாஹ் அதை அறிந்து (தக்க கூலி தருபவனாக) இருக்கிறான்.”

2:216 كُتِبَ عَلَيْكُمُ الْقِتَالُ وَهُوَ كُرْهٌ لَّكُمْ ۚ وَعَسَىٰ أَن تَكْرَهُوا شَيْئًا وَهُوَ خَيْرٌ لَّكُمْ ۖ وَعَسَىٰ أَن
تُحِبُّوا شَيْئًا وَهُوَ شَرٌّ لَّكُمْ ۗ وَاللَّهُ يَعْلَمُ وَأَنتُمْ لَا تَعْلَمُونَ

2:216. போர் செய்தல் - அது உங்களுக்கு வெறுப்பாக இருப்பினும் - (உங்கள் நலன் கருதி) உங்கள் மீது விதிக்கப்பட்டுள்ளது; நீங்கள் ஒரு பொருளை வெறுக்கலாம்; ஆனால் அது உங்களுக்கு நன்மை பயப்பதாக இருக்கும்; ஒரு பொருளை நீங்கள் விரும்பலாம், ஆனால் அது உங்களுக்குத் தீமை பயப்பதாக இருக்கும். (இவற்றையெல்லாம்) அல்லாஹ் அறிவான், நீங்கள் அறியமாட்டீர்கள்.

2:217 يَسْأَلُونَكَ عَنِ الشَّهْرِ الْحَرَامِ قِتَالٍ فِيهِ ۖ قُلْ قِتَالٌ فِيهِ كَبِيرٌ ۖ وَصَدٌّ عَن سَبِيلِ اللَّهِ وَكُفْرٌ
بِهِ وَالْمَسْجِدِ الْحَرَامِ وَإِخْرَاجُ أَهْلِهِ مِنْهُ أَكْبَرُ عِندَ اللَّهِ ۚ وَالْفِتْنَةُ أَكْبَرُ مِنَ الْقَتْلِ ۗ وَلَا يَزَالُونَ
يُقَاتِلُونَكُمْ حَتَّىٰ يَرُدُّوكُمْ عَن دِينِكُمْ إِنِ اسْتَطَاعُوا ۚ وَمَن يَرْتَدِدْ مِنكُمْ عَن دِينِهِ فَيَمُتْ وَهُوَ كَافِرٌ
فَأُولَٰئِكَ حَبِطَتْ أَعْمَالُهُمْ فِي الدُّنْيَا وَالْآخِرَةِ ۖ وَأُولَٰئِكَ أَصْحَابُ النَّارِ ۖ هُمْ فِيهَا خَالِدُونَ


2:217. (நபியே!) புனிதமான (விலக்கப்பட்ட) மாதங்களில் போர் புரிவது பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கிறார்கள்; நீர் கூறும்: “அக்காலத்தில் போர் செய்வது பெருங் குற்றமாகும்; ஆனால்,

அல்லாஹ்வின் பாதையை விட்டுத் தடுப்பதும், அவனை நிராகரிப்பதும், மஸ்ஜிதுல் ஹராமுக்குள் (வரவிடாது) தடுப்பதும், அங்குள்ளவர்களை அதிலிருந்து வெளியேற்றுவதும் (-ஆகியவையெல்லாம்) அதைவிடப் பெருங் குற்றங்களாகும்; ∴பித்னா (குழப்பம்) செய்வது, கொலையைவிடக் கொடியது; அவர்களுக்கு இயன்றால் உங்கள் மார்க்கத்திலிருந்து உங்களைத் திருப்பிவிடும் வரை உங்களுடன் போர் செய்வதை நிறுத்த மாட்டார்கள்; உங்களில் எவரேனும் ஒருவர் தம்முடைய மார்க்கத்திலிருந்து திரும்பி, கா∴பிராக (நிராகரிப்பவராக) இறந்துவிட்டால் அவர்களின் நற்கருமங்கள் இவ்வுலகத்திலும், மறு உலகத்திலும் (பலன் தராமல்) அழிந்துவிடும்; இன்னும் அவர்கள் நரகவாசிகளாக அந்நெருப்பில் என்றென்றும் தங்கிவிடுவார்கள்."

2:218 إِنَّ الَّذِيْنَ اٰمَنُوْا وَالَّذِيْنَ هَاجَرُوْا وَجَاهَدُوْا فِىْ سَبِيْلِ اللّٰهِۙ اُولٰٓٮِٕكَ يَرْجُوْنَ رَحْمَتَ اللّٰهِ‌ؕ وَاللّٰهُ غَفُوْرٌ رَّحِيْمٌ

2:218. நம்பிக்கை கொண்டோரும், (கா∴பிர்களின் கொடுமைகளால் நாட்டை விட்டு) துறந்தவர்களும், அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் செய்தோரும் அல்லாஹ்வின் (கருணையை) - ரஹ்மத்தை - நிச்சயமாக எதிர்பார்க்கிறார்கள்; மேலும், அல்லாஹ் மிகவும் மன்னிப்போனாகவும், பேரன்புடையோனாகவும் இருக்கின்றான்.


2:219 يَسْــٴَــلُوْنَكَ عَنِ الْخَمْرِ وَالْمَيْسِرِ‌ؕ قُلْ فِيْهِمَآ اِثْمٌ كَبِيْرٌ وَّمَنَافِعُ لِلنَّاسِ وَاِثْمُهُمَآ اَكْبَرُ مِنْ نَّفْعِهِمَا‌ؕ وَيَسْــٴَــلُوْنَكَ مَاذَا يُنْفِقُوْنَ قُلِ الْعَفْوَ‌ؕ كَذٰلِكَ يُبَيِّنُ اللّٰهُ لَـكُمُ الْاٰيٰتِ لَعَلَّكُمْ تَتَفَكَّرُوْنَۙ



2:219. (நபியே!) மதுபானத்தையும், சூதாட்டத்தையும் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர்; நீர் கூறும்: “அவ்விரண்டிலும் பெரும் பாவம் இருக்கிறது; மனிதர்களுக்கு (அவற்றில் சில) பலன்களுமுண்டு; ஆனால் அவ்விரண்டிலும் உள்ள பாவம் அவ்விரண்டிலும் உள்ள பலனைவிடப் பெரிது” (நபியே! “தர்மத்திற்காக) எதைச் செலவு செய்ய வேண்டும்” என்று அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர் “(உங்கள் தேவைக்கு வேண்டியது போக) மீதமானவற்றைச் செலவு செய்யுங்கள்” என்று கூறுவீராக; நீங்கள் சிந்தித்து உணரும் பொருட்டு அல்லாஹ் (தன்) வசனங்களை(யும், அத்தாட்சிகளையும்) இவ்வாறு விவரிக்கின்றான்.

2:220 فِى الدُّنْيَا وَالْاٰخِرَةِ وَيَسْــَٔلُوْنَكَ عَنِ الْيَتٰمٰى قُلْ اِصْلَاحٌ لَّهُمْ خَيْرٌ وَاِنْ تُخَالِطُوْهُمْ
فَاِخْوَانُكُمْ وَاللّٰهُ يَعْلَمُ الْمُفْسِدَ مِنَ الْمُصْلِحِ وَلَوْ شَآءَ اللّٰهُ لَاَعْنَتَكُمْ اِنَّ اللّٰهَ عَزِيْزٌ حَكِيْمٌ

2:220. (மேல்கூறிய இரண்டும்) இவ்வுலகிலும், மறுமையிலும் (என்ன பலன்களைத் தரும் என்பதைப் பற்றி நீங்கள் தெளிவு பெறுவதற்காக தன் வசனங்களை அவ்வாறு விளக்குகிறான்.) “அநாதைகளைப் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர்;” நீர் கூறுவீராக: “அவர்களுடைய காரியங்களைச் சீராக்கி வைத்தல் மிகவும் நல்லது; நீங்கள் அவர்களுடன் கலந்து வசிக்க நேரிட்டால் அவர்கள் உங்கள் சகோதரர்களேயாவார்கள்; இன்னும் அல்லாஹ் குழப்பம் உண்டாக்குபவனைச் சரி செய்பவனின்றும் பிரித்தறிகிறான்; அல்லாஹ்




நாடியிருந்தால் உங்களைக் கஷ்டத்திற்குள்ளாக்கியிருப்பான்; நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவன்; ஞானம் மிக்கவன்."

2:221 وَلَا تَشْرِكَةٍ وَّلَوْ اَعْجَبَتْكُمْ وَلَاَمَةٌ مُّؤْمِنَةٌ خَيْرٌ مِّنْ مُّوَلَا تَنْكِحُوا الْمُشْرِكٰتِ حَتّٰى يُؤْمِنَّ
وَلَعَبْدٌ مُّؤْمِنٌ خَيْرٌ مِّنْ مُّشْرِكٍ وَّلَوْ اَعْجَبَكُمْ ؕ اُولٰٓئِكَ يَدْعُوْنَ اِلَى ۖ تُنْكِحُوا الْمُشْرِكِيْنَ حَتّٰى يُؤْمِنُوْا
وَيُبَيِّنُ اٰيٰتِهٖ لِلنَّاسِ لَعَلَّهُمْ يَتَذَكَّرُوْنَ ۝ وَاللّٰهُ يَدْعُوْٓا اِلَى الْجَنَّةِ وَالْمَغْفِرَةِ بِاِذْنِهٖ ۚ النَّارِ

2:221. (அல்லாஹ்வுக்கு) இணைவைக்கும் பெண்களை- அவர்கள் நம்பிக்கை கொள்ளும் வரை- நீங்கள் திருமணம் செய்து கொள்ளாதீர்கள்; இணை வைக்கும் ஒரு பெண், உங்களைக் கவரக்கூடியவளாக இருந்தபோதிலும், அவளைவிட மு∴மினான ஓர் அடிமைப் பெண் நிச்சயமாக மேலானவள் ஆவாள்; அவ்வாறே இணைவைக்கும் ஆண்களுக்கு- அவர்கள் நம்பிக்கை கொள்ளும் வரை (மு∴மினான பெண்களுடன்) நீங்கள் திருமணம் செய்து வைக்காதீர்கள்; இணை வைக்கும் ஆண் உங்களுக்குக் கவர்ச்சியூட்டுபவனாக இருந்த போதிலும், ஒரு மு∴மினான அடிமை அவனைவிட மேலானவன்; (நிராகரிப்போராகிய) இவர்கள், உங்களை நரக நெருப்பின் பக்கம் அழைக்கிறார்கள்; ஆனால் அல்லாஹ்வோ தன் கிருபையால் சுவர்க்கத்தின் பக்கமும், மன்னிப்பின் பக்கமும் அழைக்கிறான்; மனிதர்கள் படிப்பினை பெருவதற்காக தன் வசனங்களை அவன் தெளிவாக விளக்குகிறான்.

2:222 وَلَا تَقْرَبُوْهُنَّ ۚ قُلْ هُوَ اَذًى فَاعْتَزِلُوا النِّسَآءَ فِى الْمَحِيْضِ ۙ وَيَسْــَٔلُوْنَكَ عَنِ الْمَحِيْضِ
اِنَّ اللّٰهَ يُحِبُّ التَّوَّابِيْنَ وَيُحِبُّ الْمُتَطَهِّرِيْنَ ۚ حَيْثُ اَمَرَكُمُ اللّٰهُ ۚ فَاِذَا تَطَهَّرْنَ فَاْتُوْهُنَّ مِنْ ۚ حَتّٰى يَطْهُرْنَ





2:222. மாதவிடாய் பற்றியும் உம்மிடம் வினவுகிறார்கள்; நீர் கூறும்: “அது (ஓர் உபாதையான) தீட்டு ஆகும்; ஆகவே மாதவிடாயின் போது பெண்களை விட்டும் விலகியிருங்கள்; அவர்கள் தூய்மையாகும் வரை அவர்களை அணுகாதீர்கள்; அவர்கள் தூய்மையடைந்த பின் அல்லாஹ் எப்படி கட்டளையிட்டிருக்கின்றானோ அதன்படி அவர்களிடம் செல்லுங்கள்; பாவங்களைவிட்டு மீள்பவர்களை நிச்சயமாக அல்லாஹ் நேசிக்கிறான்; இன்னும் தூய்மையாக இருப்போரையும் நேசிக்கின்றான்.”

2:223 وَاتَّقُوا اللّٰهَ وَاعْلَمُوْٓا ۖوَقَدِّمُوْا لِاَنْفُسِكُمْ ـ فَاْتُوْا حَرْثَكُمْ اَنّٰى شِئْتُمْ ـ نِسَآؤُكُمْ حَرْثٌ لَّكُمْ
وَ بَشِّرِ الْمُؤْمِنِيْنَ اَنَّكُمْ مُّلٰقُوْهُ

2:223. உங்கள் மனைவியர் உங்கள் விளைநிலங்கள் ஆவார்கள்; எனவே உங்கள் விருப்பப்படி உங்கள் விளை நிலங்களுக்குச் செல்லுங்கள்; உங்கள் ஆத்மாக்களுக்காக முற்கூட்டியே (நற்கருமங்களின் பலனை) அனுப்புங்கள்; அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; (மறுமையில்) அவனைச் சந்திக்க வேண்டும் என்பதை உறுதியாக அறிந்து கொள்ளுங்கள். நம்பிக்கை கொண்டவர்களுக்கு நற்செய்தி கூறுவீராக!

2:224 وَاللّٰهُ سَمِيْعٌ ۖوَلَا تَجْعَلُوا اللّٰهَ عُرْضَةً لِّاَيْمَانِكُمْ اَنْ تَبَرُّوْا وَتَتَّقُوْا وَتُصْلِحُوْا بَيْنَ النَّاسِ
عَلِيْمٌ

2:224. இன்னும், நீங்கள் அல்லாஹ்வைக் கொண்டு சத்தியம் செய்வதனால், நீங்கள் நற்கருமங்கள் செய்தல், இறைபக்தியுடன் நடத்தல்,




மனிதர்களிடையே சமாதானம் செய்து வைத்தல் போன்றவற்றில் அவனை ஒரு தடையாகச் செய்துவிடாதீர்கள்; அல்லாஹ் யாவற்றையும் செவியுறுவோனாகவும், நன்கறிபவனாகவும் இருக்கின்றான்.

2:225 وَاللّٰهُ غَفُوْرٌ حَلِيْمٌ اخِذُكُمْ بِمَا كَسَبَتْ قُلُوْبُكُمْ لَا يُؤَاخِذُكُمُ اللّٰهُ بِاللَّغْوِ فِىْۤ اَيْمَانِكُمْ وَلٰكِنْ يُّؤَ


2:225. (யோசனையின்றி) நீங்கள் செய்யும் வீணான சத்தியங்களுக்காக அல்லாஹ் உங்களைக் குற்றம் பிடிக்க மாட்டான்; ஆனால் உங்களுடைய இதயங்கள் (வேண்டுமென்றே) சம்பாதித்துக் கொண்டதைப் பற்றி உங்களைக் குற்றம் பிடிப்பான்; இன்னும் அல்லாஹ் மன்னிப்போனாகவும்; மிக்க பொறுமையுடையோனுமாகவும் இருக்கின்றான்.

2:226 فَاِنْ فَآءُوْ فَاِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ لِلَّذِيْنَ يُؤْلُوْنَ مِنْ نِّسَآٮِٕهِمْ تَرَبُّصُ اَرْبَعَةِ اَشْهُرٍ

2:226. தங்கள் மனைவியருடன் கூடுவதில்லையென்று சத்தியம் செய்து கொண்டு (விலகி) இருப்பவர்களுக்கு நான்கு மாதத் தவணையுள்ளது; எனவே, (அதற்குள்) அவர்கள் மீண்டு(ம் சேர்ந்துக்) கொண்டால் நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்போனாகவும், மிக்க கருணையுடையோனுமாகவும் இருக்கின்றான்.

தொடரும்.....









एवं परम्पराप्राप्त-
मिमं राजर्षयो विदुः ।
स कालेनेह महता
योगो नष्टः परन्तप ॥ २ ॥

இவ்வாறு பரம்பரையாகக் கிடைத்த இதனை ராஜ ரிஷிகள் உணர்ந்திருந்தனர். பராந்தபா, அந்த யோகம் கால மிகுதியால் இவ்வுலகத்தில் இழக்கப்பட்டது. 2

स एवायं मया तेऽद्य
योगः प्रोक्तः पुरातनः ।
भक्तोऽसि मे सखा चेति
रहस्यं ह्येतदुत्तमम् ॥ ३ ॥

அந்தப் பழைய யோகத்தையே இன்று நான் உனக்குச் சொன்னேன், நீ என் பக்தனும் தோழனு மென்பது கருதி. இது மிகவும் உயர்ந்த ரஹஸ்யம். 3






अर्जुन उवाच—

अपरं भवतो जन्म परं जन्म विवस्वतः ।
कथमेतद्विजानीयां त्वमादौ प्रोक्तवानिति ॥ ४ ॥

அர்ஜுனன் சொல்லுகிறான்—


உன் பிறப்புப் பிந்தியது; விவஸ்வானுடைய
பிறப்பு முந்தியது. நீ இதை ஆதியில் சொன்
னவ னென்று நான் தெரிந்துகொள்வ தெப்
படி? 4

श्रीभगवानुवाच—

बहूनि मे व्यतीतानि जन्मानि तव चार्जुन ।
तान्यहं वेद सर्वाणि न त्वं वेत्थ परन्तप ॥ ५ ॥

பகவான் சொல்லுகிறான்—

அர்ஜுனா, எனக்குப் பல ஜன்மங்கள் கழிந்
திருக்கின்றன. உனக்கும் அப்படியே. பரந்
தபா, நான் அவற்றை யெல்லாம் அறிவேன்;
நீ அவற்றை அறிகிலை. 5






अजोऽपि सन्नव्ययात्मा भूतानामीश्वरोऽपि सन्।
प्रकृतिं स्वामधिष्ठाय सम्भवाम्यात्ममायया ॥६॥


பிறப்பற்றே னெனினும், அழிவற்றே னெனினும், உயிர்களுக்கெல்லாம் ஈசனே யெனினும், யான் எனது ப்ரக்ருதியில் நிலை பெற்று ஆத்ம மாயையால் பிறப் பெய்துகிறேன். 6

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥

பாரதா, எப்போதெப்போது தர்மம் அழிந்து போய் அதர்மம் எழுச்சி பெறுமோ, அப்போது நான் என்னைப் பிறப்பித்துக்கொள்ளுகிறேன். 7

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम् ।
धर्मसंस्थापनार्थाय सम्भवामि युगे युगे ॥ ८ ॥

நல்லோரைக் காக்கவும், தீயன செய்வோரை அழிக்கவும், அறத்தை நிலை நிறுத்தவும் நான் யுகந்தோறும் பிறக்கிறேன். 8







जन्म कर्म च मे दिव्य-
मेवं यो वेत्ति तत्त्वतः ।
त्यक्त्वा देहं पुनर्जन्म
नैति मामेति सोऽर्जुन ॥ ९ ॥

எனது தெய்வத்தன்மை கொண்ட பிறப்பும் செய்கையும் இங்ஙன மென்பதை உள்ளபடி யுணர்வோன் உடலைத் துறந்த பின்னர் மறு பிறப்பு எய்துவதில்லை. அர்ஜுனா! அவன் என்னை எய்துகிறான். 9

वीतरागभयक्रोधाः
मन्मया मामुपाश्रिताः ।
बहवो ज्ञानतपसा
पूता मद्भावमागताः ॥ १० ॥

விருப்பத்தையும், அச்சத்தையும், சினத்தையும் துறந்தோராய், என் மயமாய், என்னை அடைக்கலம் புகுந்து ஞானத் தவத்தால் தூய்மை பெற்று என்னியல்பு எய்தினோர் பலர்.






ये यथा मां प्रपद्यन्ते तांस्तथैव भजाम्यहम् ।
मम वर्त्मानुवर्तन्ते मनुष्याः पार्थ सर्वशः ॥११॥


யாவர் என்னை எங்ஙனம் வேண்டுகிறார்
களோ, அவர்களை நான் அங்ஙனமே சார்கிறேன்.
பார்த்தா, மனிதர் யாங்கணும் என் வழியையே
பின்பற்றுகிறார்கள். 11

काङ्क्षन्तः कर्मणां सिद्धिं यजन्त इह देवताः ।
क्षिप्रं हि मानुषे लोके सिद्धिर्भवति कर्मजा ॥१२॥

தொழில்களில் வெற்றியை விரும்புவோர்
இங்கு தேவதைகளைப் பூஜை செய்கிறார்கள்.
மனித வுலகத்தில் தொழிலினின்றும் வெற்றி
விரைவில் விளைவ தன்றோ? 12

चातुर्वर्ण्यं मया सृष्टं गुणकर्मविभागशः ।
तस्य कर्तारमपि मां विद्ध्यकर्तारमव्ययम् ॥१३

குணத்துக்கும் செய்கைக்கும் தக்கபடி நான்
நான்கு வர்ணங்களைச் சமைத்தேன். செய்கை
யற்றவனும் அழிவற்றவனுமாகிய யானே அவற்
றைச் செய்தோனென் றுணர். 13






न मां कर्माणि लिम्पन्ति
न मे कर्मफले स्पृहा ।
इति मां योऽभिजानाति
कर्मभिर्न स बध्यते ॥ १४ ॥

என்னைக் கர்மங்கள் ஒட்டுவதில்லை. எனக்குக் கர்மப்பயனில் விருப்பமில்லை. இங்ஙனம் என்னை யறிவோன் கர்மங்களால் கட்டப்பட மாட்டான்.
14

एवं ज्ञात्वा कृतं कर्म
पूर्वैरपि मुमुक्षुभिः ।
कुरु कर्मैव तस्मात्त्वं
पूर्वैः पूर्वतरं कृतम् ॥ १५ ॥

முற்காலத்தில் முக்தியை வேண்டினோரும் இதை யுணர்ந்து தொழிலை செய்தனர். ஆகலால், முன்னோர்கள் முன்பு செய்தபடி, நீயும் தொழிலையே செய்யக்கடவாய்.
15

தொடரும்.....

# Russia-Ukraine talks due as blasts rock Kyiv, Kharkiv



Kyiv and Moscow prepare for talks as Ukraine's army says Russian forces are 'continuing shelling in almost all directions'.

- Talks between Ukraine and Russia are due to begin on Monday morning near the Belarus border, reports TASS news agency.
- Ukraine's President Volodymyr Zelenskyy tells British Prime Minister Boris Johnson the next 24 hours are "crucial".
- Ukraine's military says Sunday was a "difficult time" for its troops and that Russian forces "continue shelling in almost all directions".
- Ukraine's health ministry says 352 civilians, including 14 children, have been killed since the beginning of Russia's invasion.
- Russian President Vladimir Putin has put Russia's nuclear forces on high alert.
- Kharkiv governor says Ukrainian troops have full control of the city after street fighting with Russian forces.



பெற்றோர்கள் கவனத்திற்கு...
இன்று போலியோ சொட்டு மருந்து முகாம்...
உங்களின் குழந்தைகளுக்கு மறக்காம போலியோ சொட்டு மருந்து போடுங்க...

LORDS CLUBS INTERNATIONAL
WWW.LORDSCLUBS.COM

# 0-5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு தமிழகம் முழுவதும் போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட உள்ளது

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் தமிழகத்தில் 5 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் போலியோ சொட்டு மருந்து 27.02.2022 காலை 7 மணி முதல் மாலை 5 மணிவரை போடப்படவுள்ளது.

இதற்காக தமிழகம் முழுவதும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அங்கன்வாடி மையங்கள், சத்துணவு மையங்கள், பள்ளிகள் மற்றும் முக்கிய இடங்கள் என மொத்தம் 43,051 மையங்களில் போலியோ சொட்டு மருந்து முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

சொட்டு மருந்து போடும் பணியில் 2 லட்சத்திற்கும் மேற்பட்டோர் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

ANNAI VEILANKANNI'S
GROUP OF COLLEGES



• B.Com • B.B.A. • B.C.A.
• B.A. • B.Sc. • Bio-Chemistry • Maths • Comp. Science
• M.Com • MHRM • M.Sc • Comp. Science • Bio-Chemistry

Other Professional Courses

BE • CIVIL • ECE • MECHANICAL • COMP. SCIENCE
B Pharmacy
B.Sc. Nursing
B.Ed
Dip. in Nursing

For Online Admissions: www.annaiveilankannis.com
#81, VGP Salai, West Saidapet, Chennai - 15.
Tel.: 9282144444, 9444148426



Dr S.Devaraj
Chairman

# சர்வதேச சமூக சேவகர் லார்ட்ஸ் ம.பால்ராஜ் இந்திய பிரதமருக்கு போர்க்கால அடிப்படையில் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டி வேண்டுகோள் விடுத்துள்ளார்!...






இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஜி அவர்களுக்கு லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் சர்வதேச தலைமை சமூக சேவகர் ம.பால்ராஜ் இன் அன்பு வேண்டுகோள்... மதிப்பிற்குரிய மோடி ஜி அவர்களாகிய தாங்கள் இந்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பவர் என்ற காரணத்தினால் இந்துக்களின் நலன் கருதி இந்த வேண்டுகோளை தாங்களிடம் வைக்கின்றேன்...

நம் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களில் உள்ள இந்து பெண்கள் பலர் தற்போது அவர்களின் குழந்தைகளுக்கு கல்விக் கட்டணம் செலுத்த இயலாத காரணத்தாலும் வறுமையின் சூழலாலும் இஸ்லாமிய நாடுகளான அரபு நாடுகளுக்கு பாலியல் தொழிலுக்காக விபச்சாரிகளாக அழைத்துச் செல்லப்பட்டு அங்குள்ள நட்சத்திர விடுதிகளில் அவர்களுக்கு டோக்கன் அளிக்கப்பட்டு அவர்களை காத்திருப்பில் வைக்கப்பட்டு விபச்சாரத்தில் ஈடு படுத்தி பாலியல் வன்கொடுமைகளுக்கு ஆளாக்கி சித்திரவதைகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

இவர்களை இந்தியாவிலிருந்து சென்ற விமான பயனியர்கள் பட்டியலிலும் இஸ்லாமிய நாடுகளில் உள்ள நட்சத்திர விடுதிகளின் பட்டியலிலும் கணக்கெடுப்பு செய்து அடையாளம் கண்டறிந்து போர்க்கால அடிப்படையில் உடனடி நடவடிக்கை மேற்கொண்டு அப்பெண்களை மீட்டெடுத்து இந்தியாவில் உள்ள அவர்களின் குழந்தைகளிடமும் குடும்பத்தாரிடமும் மனித நேயத்துடன் ஒப்படைக்குமாறு அன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன்.

இங்ஙனம் இந்தியர்களின் நலன் விரும்பும் ம.பால்ராஜ் சர்வதேச தலைமை சமூக சேவகர்.


LORDS
CLUBS INTERNATIONAL
Govt. Reg. No.:1359/2013
INTERNATIONAL SOCIAL SERVICES
LORDS
CLUBS INTERNATIONAL
LORDS REAL ESTATE CONSULTANCY SERVICES
Web : www.lordsclubs.com
Business Profits used for Social Services
All over India
Your lands
Vacant lands
Homes
Houses
Offices
Buildings
Schools
Colleges
Resorts and Hotels
Contact us to buy and sell
98405 59673
97908 55633